# பெரியார் பல்கலைக்கழகம்

சேலம் – 636 011

பட்ட வகுப்பு – கலையியல், அறிவியல்

இரண்டாமாண்டு

மூன்றாம் பருவம்

# செய்யுள் திரட்டு

2021–2022 ஆம் கல்வியாண்டில் சேர்க்கை பெறும்

மாணவர்களுக்குரியது

## அலகு – 1

## சிலப்பதிகாரம்

### 19. ஊர் சூழ் வரி

**கதிவரனது சொல்லைக் கேட்ட கண்ணகி, எஞ்சிய ஒற்றைச் சிலம்பை ஏந்தி, நகரினுள் புக்கு, நகர மாந்தரை நோக்கி முறையிட்டு, அழுதல்**

என்றனன் வேய்யோன்: இலங்கு ஈர் வளைத் தோளி
நின்றிலள்- நின்ற சிலம்பு ஒன்று கை ஏந்தி'
'முறை இல் அரசன்-தன் ஊர் இருந்து வாழும்
நிறை உடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈது ஒன்று'
பட்டேன், படாத துயரம், படுகாலை'
உற்றேன், உறாதது' உறுவனே? ஈது ஒன்று'
கள்வனோ அல்லன் கணவன்' என் கால் சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றாரே! ஈது ஒன்று'
மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே,
காதல் கணவனைக் காண்பனே, ஈது ஒன்று'
காதல் கணவனைக் கண்டால், அவன் வாயில்
தீது அறு நல் உரை கேட்பனே' ஈது ஒன்று'
தீது அறு நல் உரை கேளாதொழிவனேல்,
நோதக்க செய்தாள் என்று எள்ளல்' இது ஒன்று' - என்று
அல்லல் உற்று, ஆற்றாது, அழுவாளைக் கண்டு, ஏங்கி,
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம் மயங்கி-

**மதுரை மக்கள் கண்ணகியின் அவல நிலைக்கு இரங்கிக் கூறுதல்**

'களையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி,
வளையாத செங்கோல் வளைந்தது! இது என்கொல்?
மன்னவர் மன்னன் மதிக் குடை வாள் வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்தது! இது என்கொல்?

மண் குளிரச் செய்யும் மற வேல் நெடுந்தகை
தண் குடை வெம்மை விளைத்தது! இது என்கொல்?
செம் பொன் சிலம்பு ஒன்று கை ஏந்தி, நம்பொருட்டால்,
வம்பப் பெரும் தெய்வம் வந்தது! இது என்கொல்?
ஐ அரி உண் கண் அழுது, ஏங்கி, அரற்றுவாள்
தெய்வம் உற்றாள் போலும் தகையள்! இது என்கொல்?'-
என்பன சொல்லி, இனைந்து, ஏங்கி, ஆற்றவும்
வன் பழி தூற்றும் குடியதே மா மதுரை-

**கம்பலை மாக்கள் கோவலன் இறந்து கிடந்த இடத்தைக் காட்ட, மாலைப் பொழுதில் கண்ணகி தன் கணவனைக் காணுதல்**

கம்பலை மாக்கள் கணவனைத் தாம் காட்ட,
செம் பொன் கொடி அனையாள் கண்டாளைத் தான் காணான்.
மல்லல் மா ஞாலம் இருள் ஊட்டி, மா மலைமேல்,
செவ்வென கதிர் சுருங்கி, செங் கதிரோன் சென்று ஒளிப்ப,
புல்லென் மருள் மாலைப் பூங் கொடியாள் பூசலிட,
ஒவ்லென் ஒலி படைத்தது ஊர்.

**கண்ணகி சோகமுற்று அரற்றி அழுதல்**

வண்டு ஆர் இருங் குஞ்சி மாலை தன் வார் குழல்மேல்
கொண்டாள், தழீஇ, கொழுநன்பால், காலைவாய்'
புண் தாழ் குருதி புறம் சோர, மாலைவாய்,
கண்டாள். அவன் தன்னைக் காணாக் கடுந் துயரம்!

'என் உறு துயர் கண்டும், இடர் உறும் இவள் என்னீர்!
பொன் உறு நறு மேனி பொடி ஆடிக் கிடப்பதோ?
மன் உறு துயர் செய்த மறவினை அறியாதேற்கு,

என் உறு வினை காண்’ ஆ! இது என உரையாரோ?
யாரும் இல் மருள் மாலை, இடர் உறு தமியேன் முன்,
தார் மலி மணி மார்பம் தலை மூழ்கிக் கிடப்பதோ?
பார் மிகு பழி தூற்ற, பாண்டியன் தவறு இழைப்ப,
ஈர்வது ஓர் வினை காண்’ ஆ! இது என உரையாரோ?

கண் பொழி புனல் சோரும் கடு வினை உடையேன்முன்,
புண் பொழி குருதியிராய்ப் பொடி ஆடிக் கிடப்பதோ?
மன்பதை பழி தூற்ற, மன்னவன் தவறு இழைப்ப,
உண்பதோர் வினை காண்’ ஆ! இது என உரையாரோ?
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறு குறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
வை வாளின் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?’-

**கண்ணகி கோவலனைத் தழுவுதலும், அவன் உயிர்பெற்று எழுந்து பேசுதலும்**

என்று இவை சொல்லி அழுவாள் கணவன்-தன்
பொன் துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள,
நின்றான், எழுந்து’ நிறை மதி வாள் முகம்
கன்றியது! என்று, அவள் கண்ணீர் கையான் மாற்ற-

**தன் பாதத்தைக் கண்ணகி பற்ற, கோவலன் வானுலகு செல்லுதல்**

அழுது ஏங்கி, நிலத்தின் வீழ்ந்து, ஆய் இழையான் தன் கணவன்
தொழுதகைய திருந்து அடியைத் துணை வளைக் கையான் பற்ற,
பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல் அமரர் குழாத்து உளான்,
'எழுது எழில் மலர் உண் கண்! இருந்தைக்க' எனப் போனான்.

**கண்ணகியின் சிந்தனை**

'மாயம் கொல்? மற்று என்கொல்? மருட்டியதோர் தெய்வம்கொல்?
போய் எங்கு நாடுகேன்? பொருள் உரையோ இது அன்று'
காய் சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்'
தீ வேந்தன் - தனைக் கண்டு, இத் திறம் கேட்பல் யான்' என்றாள்-

**கண்ணகி சினத்துடன் பாண்டியனது கோயிலின் முன் செல்லுதல்**

என்றாள் எழுந்தாள்' இடர் உற்ற தீக் கனா
நின்றாள் நினைந்தாள், நெடுங் கயல் கண் நீர் சோர'
நின்றாள் நினைந்தாள் நெடுங் கயல் கண் நீர் துடையாச்
சென்றாள், அரசன் செழுங் கோயில் வாயில் முன்.

--------------------------------------------------------

**ஆ. மணிமேகலை – பாத்திரமரபு கூறிய காதை**

**மணிமேகலைக்கு அறவணர் அமுதசுரபி என்னும் பாத்திரம் சிந்தாதேவி ஆபுத்திரற்குக் கொடுத்தவண்ணம் கூறிய பாட்டு**

ஆங்கவற் கொருநாள் அம்பலப் பீடிகைப்
பூங்கொடி நல்லாய் புகுந்தது கேளாய்
மாரி நடுநாள் வல்லிருள் மயக்கத்
தாரிடை உழந்தோர் அம்பல மரீஇத்
துயில்வோன் தன்னைத் தொழுதனர் ஏத்தி
வயிறுகாய் பெரும்பசி மலைக்கும் என்றலும்
ஏற்றூண் அல்லது வேற்றூண் இல்லோன்
ஆற்றுவது காணான் ஆரஞர் எய்தக்
கேளிது மாதோ கெடுகநின் தீதென
யாவரும் ஏத்தும் இருங்கலை நியமத்துத்
தேவி சிந்தா விளக்குத் தோன்றி
ஏடா அழியல் எழுந்திது கொள்ளாய்
நாடுவறங் கூரினுமிவ் வோடுவறங் கூராது
வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது
தான்தொலை வில்லாத் தகைமைய தென்றே
தன்கைப் பாத்திரம் அவன்கைக் கொடுத்தலும்
சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
ஏனோர் உற்ற இடர்களை வாயெனத்
தான்தொழு தேத்தித் தலைவியை வணங்கி
ஆங்கவர் பசிதீர்த் தந்நாள் தொட்டு
வாங்குகை வருந்த மன்னுயிர் ஓம்பலின்
மக்களும் மாவும் மரஞ்சேர் பறவையும்
தொக்குடன் ஈண்டிச் சூழ்ந்தன விடாஅ
பழுமரத் தீண்டிய பறவையின் எழூஉம்
இழுமென் சும்மை இடையின் றொலிப்ப
ஈண்டுநீர் ஞாலத் திவன்செயல் இந்திரன்

பாண்டு கம்பளந் துளக்கிய தாகலின்
தளர்ந்த நடையின் தண்டிகால் ஊன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னாகி
மாயிரு ஞாலத்து மன்னுயிர் ஓம்பும்
ஆருயிர் முதல்வன் தன்முன் தோன்றி
இந்திரன் வந்தேன் யாது நின்கருத்து
உன்பெரும் தானத் துறுபயன் கொள்கென
வெள்ளை மகன்போல் விலாஇற நக்கீங்
கெள்ளினன் போமென் றெடுத்துரை செய்வோன்
ஈண்டுச் செய்வினை ஆண்டுநுகர்ந் திருத்தல்
காண்தகு சிறப்பின்நும் கடவுள ரல்லது
அறஞ்செய் மாக்கள் புறங்காத் தோம்புநர்
நற்றவஞ் செய்வோர் பற்றற முயல்வோர்
யாவரும் இல்லாத் தேவர்கள் னாட்டுக்
கிறைவன் ஆகிய பெருவிறல் வேந்தே
வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தவர்
திருந்துமுகங் காட்டுமென் தெய்வக் கடிஞை
உண்டி கொல்லோ உடுப்பன கொல்லோ
பெண்டிர் கொல்லோ பேணுநர் கொல்லோ
யாவையீங் களிப்பன தேவர்கோன் என்றலும்
புரப்போன் பாத்திரம் பொழிந்தூண் சுரந்தீங்
கிரப்போர்க் காணா தேமாந் திருப்ப
நிரப்பின் றெய்திய நீணில மடங்கலும்
பரப்பு நீரால் பல்வளம் சுரக்கென
ஆங்கவன் பொருட்டால் ஆயிரங் கண்ணோன்
ஓங்குயர் பெருஞ்சிறப் புலகோர்க் களித்தலும்
பன்னீ ராண்டு பாண்டிநன் னாடு
மன்னுயிர் மடிய மழைவள மிழந்தது
வசித்தொழில் உதவ மாநிலங் கொழுப்பப்
பசிப்புயிர் அறியாப் பான்மைத் தாகலின்
ஆருயி ரோம்புநன் அம்பலப் பீடிகை

ஊணொலி அரவம் ஒடுங்கிய தாகி
விடருந் தூர்த்தரும் விட்டேற் றாளரும்
நடவை மாக்களும் நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியும்
முட்டா வாழ்க்கை முறைமைய தாக
ஆபுத் திரன்தான் அம்பலம் நீங்கி
ஊரூர் தோறும் உண்போர் வினாஅய்
யாரிவன் என்றே யாவரும் இகழ்ந்தாங்
கருந்தே மாந்த ஆருயிர் முதல்வனே
இருந்தாய் நீயோ என்பார் இன்மையின்
திருவின் செல்வம் பெருங்கடல் கொள்ள
ஒருதனி வரூஉம் பெருமகன் போலத்
தானே தமியன் வருவோன் தன்முன்
மாநீர் வங்கம் வந்தோர் வணங்கிச்
சாவக நன்னாட்டுத் தண்பெயல் மறுத்தலின்
ஊனுயிர் மடிந்த துரவோய் என்றலும்
அமரர்கோன் ஆணையின் அருந்துவோர்ப் பெறாது
குமரி மூத்தஎன் பாத்திரம் ஏந்தி
அங்கந் நாட்டுப் புகுவதென் கருத்தென
வங்க மாக்களொடு மகிழ்வுட னேறிக்
கால்விசை கடுகக் கடல்கலக் குறுதலின்
மாலிதை மணிபல் லவத்திடை வீழ்த்துத்
தங்கிய தொருநாள் தானாங் கிழிந்தனன்
இழிந்தோன் ஏறினன் என்றிதை எடுத்து
வழங்குநீர் வங்கம் வல்லிருள் போதலும்
வங்கம் போயபின் வருந்து துயர் எய்தி
அங்கு வாழ்வோர் யாவரும் இன்மையின்
மன்னுயிர் ஓம்புமிம் மாபெரும் பாத்திரம்
என்னுயிர் ஓம்புதல் யானோ பொறேஎன்
தவந்தீர் மருங்கில் தனித்துயர் உழந்தேன்
சுமந்தென் பாத்திரம் என்றனன் தொழுது

கோமுகி என்னுங் கொழுநீர் இலஞ்சியின்
ஓரியாண் டொருநாள் தோன்றென விடுவோன்
அருளறம் பூண்டாங் காருயி ரோம்புநர்
உளரெனில் அவர்கைப் புகுவாய் என்றாங்
குண்ணா நோன்போ டுயிர்பதிப் பெயர்ப்பழி
அந்நா ளாங்கவன் தன்பாற் சென்றே
என்னுற் றனையோ என்றியான் கேட்பத்
தன்னுற் றனபல தானெடுத் துரைத்தனன்
குணதிசைத் தோன்றிக் காரிருள் சீத்துக்
குடதிசைச் சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மன்னுடம் பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளுந் தலைத்தாள் வேந்தன்
ஆவயிற் றுதித்தனன் ஆங்கவன் தானென்.

---------------------------------------------

## இ. சீவகசிந்தாமணி - திருத்தக்கதேவர்
## நாமகள் இலம்பகம் - நாட்டுவளம்
### (பாடல் எண் 1 முதல் 48 வரை)

நா வீற்று இருந்த புல மா மகளோடு நன் பொன்
பூ வீற்று இருந்த திருமாமகள் புல்ல நாளும்
பா வீற்று இருந்த கலை பார் அறச் சென்ற கேள்விக்
கோ வீற்று இருந்த குடி நாட்டு அணி கூறல் உற்றேன் 1

காய் மாண்ட தெங்கின் பழம் வீழக் கமுகின் நெற்றிப்
பூ மாண்ட தீம் தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே 2

இலங்கல் ஆழியினான் களிற்று ஈட்டம் போல்
கலங்கு தெண் திரை மேய்ந்து கண மழை
பொலம் கொள் கொன்றையினான் சடை போல் மின்னி
விலங்கல் சேர்ந்து விண் ஏறி விட்டு ஆர்த்தவே 3

தேன் நிரைத்து உயர் மொய்வரைச் சென்னியின்
மேல் நிரைத்து விசும்பு உற வெள்ளி வெண்
கோல் நிரைத்தன போல் கொழுந் தாரைகள்
வான் நிரைத்து மணந்து சொரிந்தவே 4

குழவி வெண் மதிக் கோடு உழக் கீண்டு தேன்
முழவின் நின்று அதிர் மொய் வரைச் சென்னியின்
இழியும் வெள் அருவித் திரள் யாவையும்
குழுவின் மாடத் துகில் கொடி போன்றவே 5

இலங்கு நீள் முடி இந்திரன் மார்பின் மேல்
விலங்கி வீழ்ந்த முத்தாரமும் போன்றவை
நலம் கொள் பொன்னொடு நல் மணி சிந்தலால்
கலன் பெய் பேழை கவிழ்த்தவும் போன்றவே 6

வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழு நிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர் தொறும் உய்த்துராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே 7

மையல் யானையின் மும் மதம் ஆர்ந்து தேன்
ஐய பொன் அசும்பு ஆடி அளைந்து உராய்ச்
செய்ய சந்தனம் தீம் பழம் ஆதியா
நைய வாரி நடந்தது நன்று அரோ 8

வீடு இல் பட்டினம் வெளவிய வேந்து எனக்
காடு கையரிக் கொண்டு கவர்ந்து போய்
மோடு கொள் புனல் மூரி நெடுங் கடல்
நாடு முற்றியதோ என நண்ணிற்றே 9

திரை பொரு கனை கடல் செல்வன் சென்னி மேல்
நுரை எனும் மாலையை நுகரச் சூட்டுவான்
சரை எனும் பெயர் உடைத் தடம் கொள் வெம் முலைக்
குரை புனல் கன்னி கொண்டு இழிந்தது என்பவே 10

பழம் கொள் தெங்கு இலை எனப் பரந்து பாய் புனல்
வழங்க முன் இயற்றிய சுதை செய் வாய்த் தலை
தழம் குரல் பம்பையில் சாற்றி நாடு எலாம்
முழங்கு தீம் புனல் அகம் முரிய மொய்த்தவே 11

வெலற்கு அரும் குஞ்சரம் வேட்டம் பட்டு எனத்
தலைத் தலை அவர் கதம் தவிர்ப்பத் தாழ்ந்து போய்க்
குலத் தலை மகளிர் தம் கற்பின் கோட்டகம்
நிலைப் படா நிறைந்தன பிறவும் என்பவே 12

கவ்வையும் கடும் புனல் ஒலியும் காப்பவர்
செவ்வன் நூறு ஆயிரம் சிலைக்கும் பம்பையும்
எவ் எலாத் திசைகளும் ஈண்டிக் காரொடு
பவ்வம் நின்று இயம்புவது ஒத்த என்பவே 13

மாமனும் மருகனும் போலும் அன்பின
காமனும் சாமனும் கலந்த காட்சிய
பூமனும் அரிசிப் புல் ஆர்ந்த மோட்டின
தாம் இனம் அமைந்து தம் தொழிலின் மிக்கவே 14

நெறி மருப்பு எருமையின் ஒருத்தல் நீள் இனம்
செறி மருப்பு ஏற்று இனம் சிலம்பப் பண்ணுறீஇப்
பொறி வரி வராலினம் இரியப் புக்கு உடன்
வெறி கமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே 15

சேறு அமை செறுவினுள் செந்நெல் வான் முளை
வீறொடு விளைக என‌த் தொழுது வித்துவார்
நாறு இது பதம் எனப் பறித்து நாள் செய்வார்
கூறிய கடைசியர் குழாம் கொண்டு ஏகுவார் 16

முலைத் தடம் சேதகம் பொறிப்ப மற்று அவர்
குலைத்து உடன் பதித்தலின் குதித்த வாள் கயல்
புலத்து இடைக் கவரி கன்று ஊட்டப் போந்த பால்
நிலத்து இடைப் பாய்ந்து அவை பிறழும் நீரவே 17

பால் சுவை அறிந்து அவை பழனத் தாமரை
மேல் செலப் பாய்தலின் வெரீஇய வண்டு இனம்
கோல் தொடி நுளைச்சியர் முத்தம் கோப்பவர்
ஏற்றிய மாலைத் தேன் இரியப் பாய்ந்தவே 18

இரிந்த தேன் குவளையின் நெற்றி தைவர
முரிந்து போது அவிழ்ந்து கொங்கு உயிர்க்கும் முல்லையின்
அரும்பு சேர்ந்து அணி ஞிமிறு ஆர்ப்ப வாய் பதம்
விருந்து எதிர் கொணம் எனத் தழுவி வீழ்ந்தவே 19

வள முடி நடுபவர் வரம்பு இல் கம்பலை
இள மழை முழக்கு என மஞ்ஞை ஏங்கலின்
அளமரு குயிலினம் அழுங்கிப் பூம் பொழில்
உளம் மெலி மகளிரின் ஒடுங்கும் என்பவே 20

வளைக் கையால் கடைசியர் மட்டு வாக்கலின்
திளைத்தவர் பருகிய தேறல் தேங்குழிக்
களிப்ப உண்டு இள அனம் கன்னி நாரையைத்
திளைத்தலின் பெடை மயில் தெருட்டும் செம்மற்றே 21

கண் எனக் குவளையும் கட்டல் ஓம்பினார்
வண்ண வாள் முகம் என மரையின் உள் புகார்
பண் எழுத்து இயல் படப் பரப்பி இட்டனர்
தண் வயல் உழவர் தம் தன்மை இன்னதே 22

நித்திலப் பந்துடன் ஈன்று பாதிரி
ஒத்த பூ உடற்றிய நாவின் நாகினால்
தத்து நீர் நாரை மேல் எறியத் தண் கடல்
பைத்து எழு திரை எனப் பறவை ஆலுமே 23

சொல் அரும் சூல் பசும் பாம்பின் தோற்றம் போல்
மெல்லவே கரு இருந்து ஈன்று மேல் அலார்
செல்வமே போல் தலை நிறுவித் தேர்ந்த நூல்
கல்வி சேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே 24

மீன் கணின் அளவும் வெற்று இடங்கள் இன்மையால்
தேன் கணக் கரும்பு இயல் காடும் செந் நெலின்
வான் புகழ் களிறு மாய் கழனி ஆக்கமும்
ஊன் கணார்க்கு உரைப்ப அரிது ஒல் என் சும்மைத்தே 25

ஆய் பிழி விருத்து வண்டு அயிற்றி உண்டு தேன்
வாய் பொழி குவளைகள் சூடி மள்ளர்கள்
தேய் பிறை இரும்பு தம் வலக்கை சேர்த்தினர்
ஆய் செந் நெல் அகன்ற காடு அரிகுற்றார்களே 26

வலியுடைக் கைகளால் மலர்ந்த தாமரை
மெலிவு எய்தக் குவளைகள் வாடக் கம்பலம்
பொலிவு எய்தப் பூம் பொய்கை சிலம்பிப் பார்ப்பு எழ
மலை பட அரிந்து கூன் குயம் கை மாற்றினார் 27

வாளையின் இனம் தலை இரிய வண்டு அலர்
தாள் உடைத் தாமரை கிழிய வண் சுமை
கோள் உடை இளையவர் குழாம் கொண்டு ஏகலில்
பாளை வாய் கமுகு இனம் பழங்கள் சிந்துமே 28

சோர் புயல் முகில் தலை விலங்கித் தூ நிலம்
மார்பு கொண்டு ஆர்ந்து அது நரல வண் சுளை
ஆர்புறு பலாப் பழம் அழிந்த நீள் களம்
போர்பினான் மலிந்து உடன் பொலிந்த நீரவே 29

ஈடு சால் போர் பழித்து எருமைப் போத்தினால்
மாடு உறத் தெழித்து வை களைந்து கால் உறீஇச்
சேடு உறக் கூப்பிய செந்நெல் குப்பைகள்
கோடு உயர் கொழும் பொனின் குன்றம் ஒத்தவே 30

கரும்பு கண் உடைப்பவர் ஆலை தோறெலாம்
விரும்பி வந்து அடைந்தவர் பருகி விஞ்சிய
திருந்து சாறு அடுவுழிப் பிறந்த தீம் புகை
பரந்து விண் புகுதலின் பருதி சேந்ததே 31

கிணை நிலைப் பொருநர் தம் செல்லல் கீழ்ப் படப்
பணை நிலையாய் செந்நெல் பகரும் பண்டியும்
கணை நிலைக் கரும்பினில் கவரும் பண்டியும்
மண நிலை மலர் பெய்து மறுகும் பண்டியும் 32

மல்லல் அம் தெங்கு இள நீர் பெய் பண்டியும்
மெல் இலைப் பண்டியும் கமுகின் மேதகு
பல் பழுக்காய்க் குலை பெய்த பண்டியும்
ஒல்கு தீம் பண்டம் பெய்து ஒழுகும் பண்டியும் 33

கருங் கடல் வளம் தரக் கரையும் பண்டியும்
நெருங்குபு முதிரையின் நிறைந்த பண்டியும்
பெருங் கலிப் பண்டிகள் பிறவும் செற்றுபு
திருந்தி எத் திசைகளும் செறிந்த என்பவே 34

கிளி வளர் பூ மருது அணிந்து கேடு இலா
வள வயல் வைகலும் இன்னது என்ப தேன்
துளியொடு மதுத் துளி அறாத சோலை சூழ்
ஒளி அமை இருக்கை ஊர் உரைக்க நின்றவே 35

சேவல் அன்னம் தாமரையின் தோடு அவிழ்ந்த செவ்விப் பூக்
காவில் கூடு எடுக்கிய கவ்விக் கொண்டு இருந்தன
தாவில் பொன் விளக்கமாத் தண் குயில் முழவமாத்
தூவி மஞ்ஞை நன் மணம் புகுத்தும் தும்பிக் கொம்பரோ 36

கூடினார் கண் அம்மலர்க் குவளை அம் குழி இடை
வாடு வள்ளை மேல் எலாம் வாளை ஏறப் பாய்வன
பாடு சால் கயிற்றில் பாய்ந்து பல் கலன் ஒலிப்பப் போந்து
ஆடு கூத்தி ஆடல் போன்ற நாரை காண்ப ஒத்தவே 37

காவி அன்ன கண்ணினார் கயம் தலைக் குடைதலின்
ஆவி அன்ன பூந் துகில் அணிந்த அல்குல் பல் கலை
கோவை அற்று உதிர்ந்தன கொள்ளும் நீரர் இன்மையின்
வாவி யாவும் பொன் அணிந்து வானம் பூத்தது ஒத்தவே 38

பாசவல் இடிப்பவர் உலக்கை வாழைப் பல் பழம்
ஆசினி வருக்கை மா தடிந்து தேம் கனி உதிர்த்து
ஊசல் ஆடு பைங் கமுகு தெங்கின் ஒண் பழம் பரீஇ
வாசத் தாழை சண்பகத்தின் வான் மலர்கள் நக்குமே 39
மன்றல் நாறு இலஞ்சி மேய்ந்து மா முலை சுரந்த பால்
நின்ற தாரையால் நிலம் நனைப்ப ஏகி நீள் மனைக்

கன்று அருத்தி மங்கையர் கலம் நிறை பொழிதர
நின்ற மேதியால் பொலிந்த நீர மாட மாலையே 40

வெள்ளிப் போழ் விலங்க வைத்து அனைய வாய் மணித் தலை
கொள் பவளம் கோத்த அனைய கால குன்றிச் செங்கண
ஒள் அகில் புகை திரண்டது ஒக்கும் மா மணிப் புறாக்
கிள்ளையோடு பால் உணும் கேடு இல் பூவை பாடவே 41

காடி உண்ட பூந் துகில் கழும ஊட்டும் பூம் புகை
மாட மாலை மேல் நலார் மணிக் குழலின் மூழ்கலின்
கோடு உயர்ந்த குன்றின் மேல் குழீஇய மஞ்ஞைதம் சிறகு
ஆடும் மஞ்சினுள் விரித்து இருந்த வண்ணம் அன்னரே 42

கண் உளார் நும் காதலர் ஒழிக காமம் ஈங்கு என
உள் நிலாய வேட்கையால் ஊடினாரை ஆடவர்
வண்ண மேகலைகளைப் பற்ற அற்று உதிர்ந்தன
எண் இல் பொன் சுடு நெருப்பு உக்க முற்றம் ஒத்தவே 43

கோட்டு இளந் தகர்களும் கொய் மலர தோன்றி போல்
சூட்டு உடைய சேவலும் தோணிக் கோழி ஆதியா
வேட்டவற்றின் ஊறு உளார் வெருளி மாந்தர் போர்க் கொளீஇக்
காட்டி ஆர்க்கும் கௌவையும் கடியும் கௌவை கௌவையே 44

இறும் நுசுப்பின் அம் நலார் ஏந்து வள்ளத்து ஏந்திய
நறவம் கொப்புளித்தலின் நாகு புன்னை பூத்தன
சிறகர் வண்டு செவ்வழி பாட மாடத்து ஊடு எலாம்
இறை கொள் வானின் மீன் என அரம்பை முலையின் இருந்தவே 45

விலக்கு இல் சாலை யாவர்க்கும் வெப்பின் முப் பழச் சுனைத்
தலைத் தணீர் மலர் அணிந்து சந்தனம் செய் பந்தரும்
கொலைத் தலைய வேல் கணார் கூத்தும் அன்றி ஐம் பொறி
நிலத் தலைய துப்பு எலாம் நிறை துளும்பும் ஊர்களே 46

அடிசில் வைகல் ஆயிரம் அறப் புறமும் ஆயிரம்
கொடி அனார் செய் கோலமும் வைகல் தோறும் ஆயிரம்
மடிவு இல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்
ஒடிவு இலை வேறு ஆயிரம் ஓம்புவாரின் ஓம்பவே 47

நல்தவம் செய்வார்க்கு இடம் தவம் செய்வார்க்கும் அஃது இடம்
நல் பொருள் செய்வார்க்கு இடம் பொருள் செய்வார்க்கும் அஃது இடம்
பெற்ற இன்பம் விழைவிப்பான் விண் உவந்து வீழ்ந்து என
மற்ற நாடு வட்டம் ஆக வைகும் அற்ற நாடு அரோ 48

---

## ஈ. குண்டலகேசி – நாதகுத்தனார்

### கடவுள் வாழ்த்து

1 . முன்தான் பெருமைக்கண் நின்றான்
முடிவு எய்துகாறும்
நன்றே நினைந்தான் குணமே மொழிந்தான்
தனக்கு என்று
ஒன்றானும் உள்ளான் பிறர்க்கே
உறுதிக்கு உழந்தான்
அன்றே இறைவன் அவன்தாள்
சரண் நாங்களே.

### அவை அடக்கம்

2. நோய்க்கு உற்ற மாந்தர் மருந்தின்
சுவை நோக்க கில்லார்
தீக்குற்ற காதல் உடையார்
புகைத் தீமை ஓரார்
போய்க்குற்றம் மூன்றும் அறுத்தான்
புகழ்கூறுவேற்கு என்
வாய்க்கு உற்ற சொல்லின் வழுவும்
வழு அல்ல அன்றே.

### மனம் தூயோர்க்கே இன்பம் உள ஆகும் எனல்

3. வாயுவினை நோக்கிஉள மாண்டவய நாவாய்
ஆயுவினை நோக்கிஉள வாழ்க்கை அதுவேபோல்
தீயவினை நோக்கும்இயல் சிந்தனையும் இல்லாத
தூயவனை நோக்கிஉள துப்புரவும் எல்லாம்.

### மெய்த்தவம்

4. போற்றல் உடை நீக்குதல் பொடித்துகள் மெய்பூசல்
கூர்த்த பனி ஆற்றுதல் குளித்து அழலுள் நிற்றல்
சார்த்தர் இடு பிச்சையர் சடைத் தலையர் ஆதல்
வார்த்தை இவை செய்தவம் மடிந்து ஒழுகல் என்றான்.

### நுகர்வினால் அவா அறுத்தல் கூடாது எனல்

5. வகை எழில் தோள்கள் என்றும்
மணிநிறக் குஞ்சி என்றும்
புகழ்எழ விகற்பிக்கின்ற
பொருள் இல்காமத்தை மற்றோர்
தொகை எழும் காதல் தன்னால்
துய்த்து யாம் துடைத்தும் என்பார்
அகை அழல் அழுவம் தன்னை
நெய்யினால் அவிக்கல் ஆமோ!

### இதுவும் அது

6. அனல்என நினைப்பில் பொத்தி
அகம் தலைக் கொண்ட காமக்
கனலினை உவர்ப்பு நீரால்
கடையற அவித்தும் என்னார்
நினைவிலாப் புணர்ச்சி தன்னால்
நீக்குதும் என்று நிற்பார்
புனலினைப் புனலினாலே
யாவர் போகாமை வைப்பார்.

### யாக்கை நிலையாமை

7. போதர உயிர்த்த ஆவி
புக உயிர்க்கின்றதேனும்
ஊதியம் என்று கொள்வர்
உணர்வினான் மிக்க நீரார்
ஆதலால் அழிதல் மாலைப்
பொருள்களுக்கு அழிதல் வேண்டா
காதலால் அழுதும் என்பார்
கண்நனி களையல் உற்றார்.

### கூற்றுவன் கொடுமை

8. அரவினம் அரக்கர் ஆளி
அவைகளும் சிறிது தம்மை
மருவினால் தீய ஆகா
வரம்பில் காலத்துள் என்றும்
பிரிவிலம் ஆகித் தன்சொல்
பேணியே ஒழுகும் நங்கட்கு
ஒருபொழுது இரங்க மாட்டாக்
கூற்றின் யார் உய்தும் என்பார்.

### இதுவும் அது

9. பாளையாம் தன்மை செத்தும்
பாலனாம் தன்மை செத்தும்
காளையாம் தன்மை செத்தும்
காமுறும் இளமை செத்தும்
மீளும்இவ் இயல்பும் இன்னே
மேல்வரு மூப்பும் ஆகி
நாளும் நாள் சாகின்றாமால்
நமக்கு நாம் அழாதது என்னோ!

### இதுவும் அது

10. கோள்வலைப் பட்டுச் சாவாம்
கொலைக்களம் குறித்துச் சென்றே
மீளினும் மீளக் காண்டும்
மீட்சி ஒன்றானும் இல்லா
நாள்அடி இடுதல் தோன்றும்
நம்உயிர் பருகும் கூற்றின்
வாளின்வாய்த் தலைவைப்பாக்குச்
செல்கின்றோம் வாழ்கின்றோமா!

## அலகு – 2
## அ. மெய்ப் பொருள் நாயனார் புராணம்

1. சேதி நல் நாட்டு நீடு திருக் கோவலூரின் மன்னி
மாது ஒரு பாகர் அன்பின் வழி வரு மலாடர் கோமான்'
வேத நல் நெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க்கு அன்பர் கருத்து அறிந்து ஏவல் செய்வார்.

2. அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல் காத்து
வரை நெடும் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றி
உரை திறம்பாத நீதி ஓங்கு நீர்மை யினின் மிக்கார்
திரை செய் நீர்ச்சடையான் அன்பர் வேடமே சிந்தை செய்வார்.

3. மங்கையைப் பாகமாக உடையவர் மன்னும் கோயில்
எங்கணும் பூசை நீடி ஏழ் இசைப் பாடல் ஆடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்'
தங்கள் நாயகருக்கு அன்பர் தாள் அலால் சார்பு ஒன்று இல்லார்.

4. தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும் என்று
நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவு அறக் கொடுத்து வந்தார்.

5. இன்னவாறு ஒழுகும் நாளில் இகல் திறம் புரிந்து ஓர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும் ஆசையால் அமர் மேல்கொண்டு
பொன் அணி ஓடை யானைப் பொரு பரி காலாள் மற்றும்
பன் முறை இழந்து தோற்றுப் பரிபவப் பட்டுப் போனான்.

6. இப்படி இழந்த மாற்றான் இகலினால் வெல்ல மாட்டான்
மெய்ப் பொருள் வேந்தன் சீலம் அறிந்து வெண் நீறு சாத்தும்
அப்பெரு வேடம் கொண்டே அற்றத்தில் வெல்வான் ஆகச்
செப்ப அரும் நிலைமை எண்ணித் திருக் கோவலூரில் சேர்வான்.

7. மெய் எல்லாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி,
மை பொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய் தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்.

8. மா தவ வேடம் கொண்ட வன்கணான் மாடம் தோறும்
கோதை சூழ் அளக பாரக் குழைக் கொடி ஆட மீது
சோதி வெண் கொடிகள் ஆடும் சுடர் நெடு மறுகில் போகிச்
சேதியர் பெருமான் கோயில் திருமணி வாயில் சேர்ந்தான்.

9. கடை உடைக் காவலாளர் கை தொழுது ஏற நின்றே
'உடையவர் தாமே வந்தார்' உள் எழுந்து அருளும்' என்னத்
தடை பல புக்க பின்பு தனித் தடை நின்ற தத்தன்
'இடை தெரிந்து அருள வேண்டும் துயில் கொள்ளும் இறைவன்' என்றான்.

10. என்று அவன் கூறக் கேட்டே ‘யான் அவற்கு உறுதி கூற
நின்றிடு நீயும்’ என்றே அவனையும் நீக்கிப் புக்குப்
பொன் திகழ் பள்ளிக் கட்டில் புரவலன் துயில மாடே
மன்றல் அம் குழல் மென் சாயல் மா தேவி இருப்பக் கண்டான்.

11. கண்டு சென்று அணையும் போது கதும் என இழிந்து தேவி
வண்டு அலர் மாலையானை எழுப்பிட, உணர்ந்து மன்னன்
அண்டர் நாயகனார் தொண்டர் ஆம் எனக் குவித்த செங் கை
கொண்டு இழிந்து எதிரே சென்று கொள்கையின் வணங்கி நின்று.

12. ‘மங்கலம் பெருக மற்று என் வாழ்வு வந்து அணைந்தது என்ன
இங்கு எழுந்து அருளப் பெற்றது என் கொலோ’ என்று கூற,
‘உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகம நூல் மண்மேல்
எங்கும் இல்லாதது ஒன்று கொடு வந்தேன்’ இயம்ப’ என்றான்.

13. ‘பேறு எனக்கு இதன் மேல் உண்டோ? பிரான் அருள் செய்த இந்த
மாறு இல் ஆகமத்தை வாசித்து அருள் செயவேண்டும்’ என்ன,
‘நாறு பூங் கோதை மாது தவிரவே நானும் நீயும்
வேறு இடத்து இருத்தல் வேண்டும்’ என்று அவன் விளம்ப, வேந்தன்.

14. திருமகள் என்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
புரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக ஏவித்
தரு தவ வேடத்தானைத் தவிசின் மேல் இருத்தித் தாமும்
இரு நிலத்து இருந்து போற்றி இனி அருள் செய்யும் என்றார்.

15. கைத் தலத்து இருந்த வஞ்சக் கவளிகை மடி மேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்து அவர் வணங்கும் போதில்,
பத்திரம் வாங்கித் தான் முன் நினைந்த அப் பரிசே செய்ய,
‘மெய்த் தவ வேடமே மெய்ப்பொருள்’ எனத் தொழுது வென்றார்.

16. மறைத்தவன் புகுந்த போதே மனம் அங்கு வைத்த தத்தன்
இறைப் பொழுதின் கண் கூடி வாளினால் எறியல் உற்றான்’
நிறைத்த செங் குருதி சோர வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப் படும் அளவில் தத்தா நமர் எனத் தடுத்து வீழ்ந்தார்.

17. வேதனை எய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதன் ஆம் தத்தன்தானும் தலையினால் வணங்கித் தாங்கி,
‘யாது நான் செய்கேன்’ என்ன, ‘எம்பிரான் அடியார் போக
மீது இடை விலக்கா வண்ணம் கொண்டு போய் விடு நீ’ என்றார்.

18. அத் திறம் அறிந்தார் எல்லாம் ‘அரசனைத் தீங்கு செய்த
பொய்த் தவன் தன்னைக் கொல்வோம்’ எனப் புடை சூழ்ந்த போது,
தத்தனும் அவரை எல்லாம் தடுத்து உடன் கொண்டு போவான்,
‘இத் தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை’ என்றான்.

19. அவ்வழி அவர்கள் எல்லாம் அஞ்சியே அகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன் திருநகர் கடந்து போந்து,
கை வடி நெடுவாள் ஏந்தி ஆள் உறாக் கானம் சேர,
வெவ் வினைக் கொடியோன் தன்னை விட்ட பின் மீண்டு போந்தான்.

20. மற்று அவன் கொண்டு போன வஞ்சனை வேடத்தான் மேல்
செற்றவர் தம்மை நீக்கித் தீது இலா நெறியில் விட்ட
சொல் திறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்' கோமகன் குறிப்பில் நின்றான்.

21. சென்று அடி வணங்கி நின்று 'செய் தவ வேடம் கொண்டு
வென்றவற்கு இடையூறு இன்றி விட்டனன்' என்று கூற,
'இன்று எனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்' என்று
நின்றவன் தன்னை நோக்கி நிறை பெரும் கருணை கூர்ந்தார்.

22. அரசியல் ஆயத்தார்க்கும் அழிவு உறும் காதலார்க்கும்
விரவிய செய்கை எல்லாம் விளம்புவார், 'விதியினாலே
பரவிய திரு நீற்று அன்பு பாது காத்து உய்ப்பீர் என்று
புரவலர் மன்றுள் ஆடும் பூங் கழல் சிந்தை செய்தார்.

23. தொண்டனார்க்கு இமயப் பாவை துணைவனார் அவர் முன் தம்மைக்
கண்டவாறு எதிரே நின்று காட்சி தந்தருளி மிக்க
அண்டர் வானவர் கட்கு எட்டா அருள் கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடை அறாமல் கும்பிடும் கொள்கை ஈந்தார்.

24. இன் உயிர் செகுக்கக் கண்டும் எம்பிரான் அன்பர் என்றே
நன் நெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என் உரை செய்தேன் ஆக இகல் விறன் மிண்டர் பொன் தாள்
சென்னி வைத்து அவர் முன் செய்த திருத் தொண்டு செப்பல் உற்றேன்.

---------------------------------------

## ஆ. கம்பராமாயணம்
## கங்கை காண் படலம்
### பரதன் கங்கையை அடைதல்

1. பூ விரி பொலன் கழல் பொரு இல் தானையான்
காவிரிநாடு அன்ன கழனி நாடு ஒரீஇத்
தாவர சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிடக் கங்கை எய்தினான்.

### பரதனொடு சென்ற சேனையுள் யானையின் மிகுதி

2. எண்ணரும் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெம் கரி மதம் அத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையவும் உரித்து அன்று ஆயதே.

### குதிரைகளின் மிகுதி

3. அடி மிசைத் தூளி புக்கு அடைந்த தேவர்தம்
முடி உறப் பரந்தது' ஓர் முறைமை தேர்ந்திலேம்'
நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசைப் புரண்டவும் புரவி ஈட்டமே.

**காலாட்படையின் மிகுதி**

4. பாலை ஏய் நிறத்தொடு பண்டு தான் படர்
ஓலை ஏய் நெடுங்கடல் ஓடிற்று இல்லையால்'
மாலை ஏய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்தது அக் கங்கை வெள்ளமே.

**பரதன் பின் சென்ற படையின் அளவு**

5. கான்தலை நண்ணிய காளை பின் படர்
தோன்றலை அவ் வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவர் உணர்த்திய அக்குரோணிகள்
மூன்று பத்தாயிரத்து இரட்டி முற்றுமே.

6. அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
'துப்பு உடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது 'என்று எடுத்த சீற்றத்தான்.

**படை வரக் கண்ட குகன் நினைவும் செயலும்**

7. குகன் எனும் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிகக் கண்கள் தீ நாற நாசியில்
புகை உறக் குனிப்புறும் புருவப் போர் விலான்.

8. மை உற உயிர் எலாம் இறுதி வாங்குவான்
கை உறு கவர் அயில் பிடித்த காலன்தான்
ஐ ஐநூறாயிரம் உருவம் ஆயின
மெய் உறு தானையான் வில்லின் கல்வியான்.

9. கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
'கிட்டியது அமர் 'எனக் கிளரும் தோளினான்.

10. 'எலி எலாம் இப்படை' அரவம் யான் 'என
ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்'
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழி புகுந்த போலவே.

11. மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான்'
ஒருங்கு அடை நெடும் படை ஒல் என் ஆர்ப்பினோடு
அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை
கருங்கடல் கிளர்ந்து என கலந்து சூழவே.

**குகன் தன் படையினர்க்கு இட்ட கட்டளை**

12. தோன்றிய புளிஞரை நோக்கிச் 'சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை உம்பர் ஏற்றுதற்கு
ஏன்றனென்' என் உயிர் துணைவற்கு ஈகுவான்
ஆன்ற பேர் அரசு' நீர் அமைதிர் ஆம் 'என்றான்.

13. “துடி எறி’ நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடி எறி’ அம்பிகள் யாதும் ஓட்டலிர்’
கடி எறி’ கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி’ எறி பட “ எனப் பெயர்த்தும் கூறுவான்.

**குகன் மீட்டும் கூறல்**

14. அஞ்சன வண்ணன், என் ஆர் உயிர் நாயகன், ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே!
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன, செல்லாவோ?
உஞ்சு இவர் போய்விடின், “நாய் குகன்“ என்று எனை ஓதாரோ?

15. ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ?
‘ஏழைமை வேடன் இறந்திலன்‘ என்று, எனை ஏசாரோ?

16. முன்னவன் என்று நினைந்திலன்’ மொய் புலி அன்னான், ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன்’ அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும் சரம் வாயாவோ?

17. பாவமும் நின்ற பெரும்பழியும் பகை நண்போடும்
ஏவமும் என்பவை மண்ணுலகு ஆள்பவர் எண்ணாரோ?
ஆ! அது போக! என் ஆர் உயிர்த் தோழமை தந்தான்மேல்
போவது, சேனையும் ஆர் உயிரும் கொடு போயன்றோ?

18. அருந்தவம் என் துணை ஆள, இவன் புவி ஆள்வானோ?
மருந்து எனின் அன்று உயிர்’ வண் புகழ் கொண்டு பின் மாயேனோ?
பொருந்திய கேண்மை உகந்தவர் தம்மொடு போகாதோ
இருந்ததும் நன்று கழிக்குவென் என்கடன் இன்றோடே.

19. தும்பியும் மாவும் மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பு இயல் தார் இவர் வாள் வலி கங்கை கடந்து அன்றோ?
வெம்பிய வேடர் உளீர்! துறை ஓடம் விலக்கீரோ
நம்பி முன்னே இனி நம் உயிர் மாய்வது நன்று அன்றோ?

20. போன படைத் தலை வீரர் தமக்கு இரை போதா இச்
சேனை கிடக்கிடு’ தேவர் வரின், சிலை மா மேகம்
சோனை படக் குடர் சூறை பட சுடர் வாளோடும்
தானை படத் தனி யானை படத் திரள் சாயேனோ.

21. நின்ற கொடைக் கை என் அன்பன் உடுக்க, நெடுஞ் சீரை
அன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தை, என் அம்பாலே
கொன்று குவித்த நிணம் கொள் பிணக் குவை கொண்டு ஓடித்
துன்று திரைக் கடல், கங்கை மடுத்து இடை தூராதோ?

22. “ஆடு கொடிப் படை சாடி, அறத்தவரே ஆள
வேடு கொடுத்தது, பார்‘‘ எனும் இப் புகழ் மேவீரோ?
நாடு கொடுத்த என் நாயகனுக்கு இவர், நாம் ஆளும்
காடு கொடுக்கிலர் ஆகி, எடுத்தது காணீரோ?

23. மா முனிவர்க்கு உறவு ஆகி, வனத்திடையே வாழும்
கோ முனியத் தகும் என்று, மனத்து இறை கொள்ளாதே,
ஏ முனை உற்றிடில், ஏழு கடல் படை என்றாலும்
ஆ முனையின் சிறு கூழ் என இப்பொழுது ஆகாதோ?

**சுமந்திரன் பரதனிடம் குகன் தன்மை சொல்லல்**

24. என்பன சொல்லி, இரும்பு அன மேனியர் ஏனோர் முன்
வன் பணை வில்லினன், மல் உயர் தோளினன், வாள் வீரற்கு
அன்பனும், நின்றனன்' நின்றது கண்டு, அரி ஏறு அன்ன
முன்பனில் வந்து, மொழிந்தனன் மூரிய தேர் வல்லான்.

25. "கங்கை இருகரை உடையான், கணக்கு இறந்த நாவாயான்,
உங்கள் குலத் தனி நாதற்கு உயிர் துணைவன், உயர் தோளான்,
வெம் கரியின் ஏறு அனையான், வில் பிடித்த வேலையினான்,
கொங்கு அலரும் நறும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான் "

26. "கல் காணும் திண்மையான், கரை காணாக் காதலான்,
அல் காணில் கண்டு அனைய அழகு அமைந்த மேனியான்,
மல் காணும் திரு நெடுந்தோள் மழை காணும் மணி நிறத்தாய்!
நின் காணும் உள்ளத்தான், நெறி எதிர் நின்றனன் " என்றான்.

**பரதன் குகனைக் காண விரைதல்**

27. தன்முன்னே, அவன் தன்மை தன் துணைவன் முந்து உரைத்த
சொல் முன்னே உவக்கின்ற துரிசு இலாத் திரு மனத்தான்,
'மன் முன்னே தழீஇக் கொண்ட மனக்கு இனிய துணைவனேல்,
என் முன்னே' அவற் காண்பென் யானே சென்று 'என எழுந்தான்.

**பரதன் தோற்றம் கண்ட குகன் நிலையும் செயலும்**

28. என்று எழுந்து தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்று எழுந்து சென்றது எனக் குளிர் கங்கைக் கரை குறுகி
நின்றவனை நோக்கினான், திருமேனி நிலை உணர்ந்தான்,
துன்று கரு நறுங்குஞ்சி எயினர்கோன் துண் என்றான்.

29. வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நல் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானைக்
கல் கனியக் கனிகின்ற துயரானைக் கண் உற்றான்,
வில் கையின் நின்று இடைவீழ, விம்முற்று நின்று ஒழிந்தான்.

30. "நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான்' தவம் வேடம் தலைநின்றான்'
துன்பம் ஒரு முடிவு இல்லை' திசை நோக்கித் தொழுகின்றான்'
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு?" என்றான்.

31. "உண்டு இடுக்கண் ஒன்று' உடையான், உலையாத அன்புடையான்
கொண்ட தவவேடமே கொண்டிருந்தான்' குறிப்பு எல்லாம்
கண்டு உணர்ந்து பெயர்கின்றேன்' காமின்கள் நெறி' " என்னாத்
தண் துறை ஓர் நாவாயில் ஒரு தனியே தான் வந்தான்.

### பரதன் வணங்கக் குகன் தழுவுதல்

32. வந்து, எதிரே தொழுதானை வணங்கினான்' மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும் அவனும், அவனடி வீழ்ந்தான்'
தந்தையினும் களி கூரத் தழுவினான், தகவு உடையோர்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

### குகன் வினாவும் பரதன் கூறும் விடையும்

33. தழுவின புளிஞர் வேந்தன் தாமரைச் செங்கணானை
'எழுவினும் உயர்ந்த தோளாய்! எய்தியது என்னை? 'என்ன,
'முழுது உலகு அளித்த தந்தை முந்தையோர் முறையில் நின்றும்
வழுவினன், அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் 'என்றான்.

### பரதன்பால் தீதின்மை கண்ட குகன் வணங்கிக் கூறல்

34. கேட்டனன் கிராதர் வேந்தன்' கிளர்ந்து எழும் உயிரன் ஆகி,
மீட்டும் மண்ணதனில் வீழ்ந்தான்' விம்மினன், உவகை வீங்கத்
தீட்ட அரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய் இல் உள்ளத்தன் புகலல் உற்றான்.

35. தாய் உரை கொண்டு, தாதை உதவிய தரணி தன்னைத்
தீ வினை என்ன நீத்துச் சிந்தனை முகத்தில் தேக்கிப்
போயினை என்ற போழ்து, புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ? தெரியின் அம்மா!

36. என் புகழ்கின்றது ஏழை எயினனேன்? இரவி என்பான்
தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமா போல,
மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழ்கள் எல்லாம்
உன் புகழ் ஆக்கிக் கொண்டாய் உயர் குணத்து உரவு தோளாய்!

### பரதன்பால் குகன் ஒப்பற்ற அன்பு கொள்ளுதல்

37. என இவை அன்ன மாற்றம் இயைவன பலவும் கூறிப்
புனை கழல் புலவு வேல் கைப் புளிஞர் கோன் பொரு இல் காதல்
அனையவற்கு அமைவில் செய்தான்' ஆர் அவற்கு அன்பு இலாதார்?
நினைவு அருங்குணம் கொடு அன்றோ இராமன்மேல் நிமிர்ந்த காதல்.

### இராமன் உறைந்த இடத்தைப் பரதனுக்குக் குகன் காட்டுதல்

38. அவ் வழி அவனை நோக்கி, அருள் தரு வாரி அன்ன
செவ்வழி உள்ளத்து அண்ணல், தென் திசைச் செங்கை கூப்பி,
'எவ்வழி உறைந்தான் நம் முன்? 'என்றலும், எயினர் வேந்தன்,
'இவ்வழி வீர! யானே காட்டுவல்' எழுக 'என்றான்.

### இராமன் பள்ளிகொண்ட இடம் கண்ட பரதனுடைய செயலும் சொல்லும்

39. கார் எனக் கடிது சென்றான்' கல் இடைப் படுத்த புல்லின்
வார் சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்'
பார் மிசைப் பதைத்து வீழ்ந்தான்' பருவரல் பரவை புக்கான்.
வார் மணிப் புனலால் மண்ணை மண்ணுநீர் ஆட்டும் கண்ணான்.

40. இயன்றது என் பொருட்டினால் இவ் இடர் உனக்கு என்ற போழ்தும்,
அயின்றனை கிழங்கும் காயும் அமுது என, அரிய புல்லில்
துயின்றனை எனவும், ஆவி துறந்திலென்' சுடரும் காசு
குயின்று உயர் மகுடம் சூடும் செல்வமும் கொள்வென் யானே.

**பரதன் இலக்குவன் இரவை எங்கே கழித்தான்? எனக் குகன் கூறல்**

41. தூண் தர நிவந்த தோளான் பின்னரும் சொல்லுவான், 'அந்
நீண்டவன் துயின்ற சூழல் இது எனில், நிமிர்ந்த நேயம்
பூண்டவன், தொடர்ந்து பின்னே போந்தவன், பொழுது நீத்தது
யாண்டு? 'என இனிது கேட்டான்' எயினர் கோன் இதனைச் சொன்னான்.

42. 'அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச,
வில்லை ஊன்றிய கையோடும் வெய்து உயிர்ப்போடும் வீரன்,
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய்! கண்கள் நீர் சொரியக் கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான்' இமைப்பு இலன் நயனம் 'என்றான்.

**பரதன் இலக்குவன் நிலை கண்டு பாராட்டுதலும் தன் நிலை கண்டு நொந்து கூறலும்**

43. என்பத்தைக் கேட்ட மைந்தன், "'இராமனுக்கு இளையார் 'என்று
முன்பு ஒத்த தோற்றத் தேம் இல், யான் என்றும் முடிவு இலாத
துன்பத்துக்கு ஏது ஆனேன்' அவன் அது துடைக்க நின்றான்'
அன்பத்துக்கு எல்லை உண்டோ? அழகிது என் அடிமை'' என்றான்.

**பரதன் கங்கை கடத்துவிக்குமாறு குகன்பால் வேண்டுதல்**

44. அவ் இடை, அண்ணல் தானும், அன்று அரும் பொடியின் வைகித்
தெவ் இடைதர நின்று ஆர்க்கும் செறி கழல் புளிஞர் கோமாஅன்!
இவ்விடைக் கங்கை யாற்றின் ஏற்றினை ஆயின், எம்மை
வெவ் இடர் கடல் நின்று ஏற்றி, வேந்தன்பால் விடுத்தது 'என்றான்.

**குகன் கட்டளையால் நாவாய்கள் வருதல்**

45. 'நன்று 'எனப் புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை' 'நாவாய்
சென்று இனி தருதிர் 'என்ன, வந்தன' சிவன் சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கும் அம்பொற் குவடு எனக் குபேரன் மானம்
ஒன்று என நாணிப் பல வேறு உருவு கொண்டனைய ஆன.

46. நங்கையர் நடையின் அன்னம் நாண் உறு செலவின் நாவாய்,
கங்கையும் இடம் இலாமை, மிடைந்தன கலந்த எங்கும்'
அங்கொடு இங்கு இழித்தி ஏற்றும் அமைதியின் அமரர் வையத்து
இங்கொடு அங்கு இழித்தி ஏற்றும் இரு வினை என்னல் ஆன.

**குகன் நாவாய்கள் வந்தமை கூற, அவற்றில் படைகளை ஏற்றும்படி பரதன் சுமந்திரனிடம் சொல்லுதல்**

47. 'வந்தன வரம்பு இல் நாவாய்' வரி சிலை குரிசில் மைந்த!
சிந்தனை யாவது? 'என்று சிருங்கிபேரியர் கோன் செப்பச்
சுந்தர வரி விலானும் சுமந்திரன் தன்னை நோக்கி,
'எந்தை! இத் தானை தன்னை ஏற்றுதி, விரைவின் 'என்றான்.

**படைகள் கங்கையைக் கடத்தல்**

48. குரிசிலது ஏவலால் அக் குரகதத் தேர் வலானும்
வரிசையின் வழாமை நோக்கி, மரபு உளி வகையின் ஏற்றக்
கரி பரி இரதம் காலாள் கணக்கு அறு கரையில் வேலை
எரி மணி திரையின் வீசும் கங்கை ஆறு ஏறிற்று அன்றே.

**யானைகள் கங்கையை நீந்திக் கடத்தல்**

49. இடி படு முழக்கம் பொங்க, இன மழை மகர நீரை
முடிவு உற முகப்ப, ஊழி இறுதியில் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலைக் கூம்பு ஒடு படர்வ போல
நெடிய கை எடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம்

**யானைகள் இறங்கி நீந்துதலால் கங்கைநீர் கரை கடந்து ஓடுதல்**

50. சங்கமும் மகர மீனும் தரளமும் மணியும் தள்ளி,
வங்கம் நீர் கடலும் வந்து தன் வழிப் படர, மானப்
பொங்கு வெம் களிறு நூக்கக் கரை ஒரீஇப் போயிற்று' அம்மா!
கங்கையும் இராமற் காணும் காதலது என்ன மாதோ.

**கங்கையில் நீந்தும் யானைகளின் மத்தகத் தோற்றம்**

51. பாங்கின் உத்தரியம் மானப் படர் திரை தவழப் பாரின்
வீங்கு நீர் அழுவம் தன்னுள் விழும் மதக் கலுழி வெள்ளத்து
ஓங்கல்கள் தலைகள் தோன்ற ஒளித்து, அவண் உயர்ந்த கும்பம்,
பூங்குழல் கங்கை நங்கை முலை எனப் பொலிந்த மாதோ!

**தேர் உறுப்புக்கள் நாவாயில் அக்கரை சேர்தல்**

52. கொடிஞ்சொடு தட்டும் அச்சும் ஆழியும் கோத்த மொட்டும்
நெடுஞ் சுவர் கொடியும் யாவும் நெறி வரும் முறையின் நீக்கி,
விடும் சுவல் புரவியோடும் வேறு வேறு ஏற்றிச் சென்ற
மடிஞ்சபின் உடம்பு கூட்டும் வினை என வயிரத் தேர்கள்.

**குதிரைகள் நாவாய் மீது அக்கரை சேர்தல்**

53. நால் இரண்டு ஆய கோடி நவை இல் நாவாய்கள் மீதாச்
சேல் திரண்டனைய ஆய கதியொடு நிமிரச் சென்ற'
பால் திரண்டனைய மெய்ய, பயம் திரண்டனைய நெஞ்ச,
கால் திரண்டனைய கால, கடுநடைக் கலினப் பாய்மா.

**ஓடத்தில் செல்லும் மாதர்களின் தோற்றம்**

54. ஊடு உற நெருக்கி, ஒடத்து ஒருவர்முன் ஒருவர் கிட்டிச்
சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர், துவன்றித் தோன்றப்
பாடு இயல் களி நல் யானைப் பந்தி அம் கடையின் குத்தக்
கோடுகள் மிடைந்த என்ன, மிடைந்தன குவவுக் கொங்கை.

55. பொலம் குழை மகளிர், நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று தாக்க,
மலங்கினர், இரண்டு பாலும் மறுகினர், வெருவி நோக்க,
அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர, அங்கும் இங்கும்
கலங்கின வெருவிப் பாயும் கயல் குலம் நிகர்த்த கண்கள்.

56. இயல்வு உறு செலவின் நாவாய் இரு கையும் எயினர் தூண்டத்
துயல்வன துடுப்பு வீசும் துவலைகள், மகளிர் மென் தூசு
உயல்வு உறு பரவை அல்குல் ஒளிப்பு அறத் தளிப்ப, உள்ளத்து
அயர்வு உறும் மதுகை மைந்தர்க்கு அயா வுயிர்ப்பு அளித்தது அம்மா!

**நாவாய்கள் சென்று சென்று திரும்புந் தோற்றம்**

57. இக்கரை இரைத்த சேனை எறிகடல் முகந்த ஏகி,
அக்கரை அடைய வீசி, வறியன அணுகும் நாவாய்,
புக்கு அலை ஆழி நல் நீர் பொறுத்தன, போக்கி போக்கி,
அக்கணம் உவரி மீளும் அகல் மழை நிகர்த்த' அம்மா!

### நாவாய்கள் கப்பல்கள் போலச் செல்லுதல்

58. அகில் இடு தூபம் அன்ன ஆய் மயில் பீலி ஆர்த்த
முகிழ் உடை முரண் மாத் தண்டு கூம்பு என, முகிலின் வண்ணத்
துகிலொடு தொடுத்த செம்பொன் தகடு இடை தொடுத்த முத்தம்
நகு கொடி நெடிய பாயின் நவ் எனச் சென்ற' நாவாய்.

### மகளிர் ஏறிய ஓடங்கள் வான ஊர்தி போல விளங்குதல

59. ஆனனம் கமலத்து அன்ன, மின் அன்ன அமிர்தச் செவ்வாய்த்
தேன் நனை குழலார் ஏறும் அம்பிகள் சிந்தும் முத்தம்
மீன் என, விரிந்த கங்கை விண் எனப் பண்ணை முற்றி,
வானவர் மகளிர் ஊறும் மானமே நிகர்த்த மாதோ!

### ஓடங்கள் உயிர் படைத்தவை போல நடத்தல்

60. துளி படத் துழாவு திண் கோல் துடுப்பு இரு காலில் தோன்ற,
நளிர் புனல் கங்கை யாற்றில் நண்டு எனச் செல்லும் நாவாய்,
களி உடை மஞ்ஞை அன்ன கனம் குழைக் கயல் கண் மாதர்
ஒளிர் அடிக் கமலம் தீண்ட, உயிர் படைத்தனவே ஒத்த.

### முனிவர் வான்வழிச் சென்று கங்கையினைக் கடத்தல்

61. மை அறு விசும்பில் மண்ணில் மற்றும் ஓர் உலகில் முற்றும்
மெய் வினை தவமே' அன்றி, மேலும் ஒன்று உளதோ? கீழோர்
செய்வினை நாவாய் ஏறித் தீண்டலர், மனத்தில் செல்லும்
மொய் விசும்பு ஓடம் ஆகத் தேவரின் முனிவர் போனார்.

### படை யாவும் நகர மக்கள் அனைவரும் கங்கை கடந்தமை

62. 'அறுபதினாயிரம் அக்குரோணி 'என்று
இறுதி செய் சேனையும் எல்லை தீர் நகர்
மறு அறு மாந்தரும் மகளிர் வெள்ளமும்
செறி திரைக் கங்கை பின் கிடக்கச் சென்றவே.

### பரதன் நாவாயில் ஏறுதல்

63. சுழித்து நீர் வரு துறை ஆற்றைச் சூழ் படை
கழித்து நீங்கியது எனக் கள்ள ஆசையை
அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட வேந்தரை
இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்.

### பரதன் குகனுக்குக் கோசலையை அறிமுகமாக்குதல்

64. சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற கோசலையைத் தொழுது நோக்கிக்
'கொற்றத் தார்க் குரிசில்! இவர் ஆர்? 'என்று குகன் வினவக் 'கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி, மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம் யான் பிறத்தலால் துறந்த பெரியாள் 'என்றான்.

### பரதன் கோசலைக்குக் குகனை அறிமுகமாக்குதல்

65. என்றலுமே அடியின் மிசை நெடிது வீழ்ந்து அழுவானை, "இவன்யார் " என்று
கன்று பிரி காராவின் துயர் உடைய கொடி வினவக் கழல் கால் மைந்தன்
இன் துணைவன் இராகவனுக்கு' இலக்குவற்கும் இளையவற்கும் எனக்கும் மூத்தான்'
குன்றுஅனைய திருநெடுந்தோள் குகன் என்பான், இந்நின்ற குரிசில் என்றான்.

## கோசலை கூறிய வாழ்த்துரை

66. நைவீர் அலீர் மைந்தீர்! இனித் துயரால் நாடு இறந்து காடு நோக்கி
மெய் வீரர் பெயர்ந்ததுவும் நலம் ஆயிற்று ஆம் அன்றே? விலங்கல் திண் தோள்
கை வீரக் களிறு அனைய காளை இவன் தன்னோடு கலந்து நீங்கள்
ஐவீரும் ஒருவீராய், அகல் இடத்தை நெடுங்காலம் அளித்திர் என்றாள்.

## சுமித்திரையை அறிவித்தல்

67. அறம் தானே என்கின்ற அயல் நின்றாள் தனை நோக்கி, 'ஐய! அன்பின்
நிறைந்தாளை உரை 'என்ன, ''நெறி திறம்பாத் தன்மெய்யை நிற்பது ஆக்கி,
இறந்தான் தன் இளந்தேவி, யாவர்க்கும் தொழுகுலம் ஆம் 'இராமன் பின்பு
பிறந்தானும் உளன் 'என்னப் பிரியாதான் தனைப்பயந்த பெரியாள்'' என்றான்.

## குகன் கைகேயியைச் சுட்டி, இவர் யார்? என்று வினவுதல்

68. சுடும்மயானத்து இடைத் தன் துணை ஏகத் தோன்றல் துயர்க் கடலின் ஏகக்,
கடுமைஆர் கானகத்து இடைக் கருணை ஆர் கலி ஏகக் கழல் கால் மாயன்
நெடுமையால் அன்று அளந்த உலகு எல்லாம் தன் மனத்தே நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தாளை'' 'யார் இவர்? 'என்று உரை'' என்னக் குரிசில் கூறும்.

## பரதன் குகனுக்குக் கைகேயியை அறிமுகமாக்குதல்

69. படர்எலாம் படைத்தாளைப் பழிவளர்க்கும் செவிலியைத் தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்து தேய,
உடர் எலாம், 'உயிர் இலா எனத் தோன்றும் உலகத்தே ஒருத்தி அன்றே
இடர் இலா முகத்தாளை அறிந்திலையேல் இந் நின்றாள் என்னை ஈன்றாள்.

## பரதன் ஏறிய ஓடம் தென்கரை அடைதல்

70. என்னக் கேட்டு அவ் இரக்கம் இலாளையும்
தன் நல் கையின் வணங்கினன் தாய் என'
அன்னப் பேடை சிறை இலதாய்க் கரை
துன்னிற்று என்னவும் வந்தது தோணியே.

## தாய்மார் சிவிகையில் வரப் பரதன் நடந்து செல்லுதல்

71. இழிந்த தாயர் சிவிகையின் ஏகத் தான்
பொழிந்த கண்ணீர்ப் புது புனல் போயினான்'
ஒழிந்திலன் குகனும் உடன் ஏகினான்'
கழிந்தனன் பல காவதம் காலினே.

## பரதன் வரப் பரத்துவாச முனிவன் எதிர்கொள்ளல்

72. பரத்தின் நீங்கும் பரத்துவன் என்னும் பேர்
வரத்தின் மிக்கு உயர் மாதவன் வைகு இடம்
அருத்தி கூர அணுகினன்' ஆண்டு அவன்
விருத்தி வேதியரோடு எதிர் மேவினான்.

-------------------------------

## இ. சீறாப்புராணம் - உமறுப்புலவர்
## கள்வரை நதிமறித்த படலம்
### கலிநிலைத்துறை

பருதி வானவன் செங்கதிர் பரந்திடத் துயின்றோ
ரெருது வாம்பரி யொட்டகம் பரந்திட வெழுந்து
முருகு லாவிய பொழில்கடந் தருநெறி முன்னித்
திருகு வெஞ்சினக் களிறென நடந்தனர் செறிந்தே. 1

சிறுபொ ருப்படர்ந் தடவிக ளுரைநெறி சேர்ந்து
வறுப ரற்படர் பாலைக ணீந்திமுள் வகிர்ந்திட்
டறல்கொ ழித்திடுங் கானையா றுகள்கடந் தகன்று
குறைவில் சந்தகில் செறிநெடு வரைகுறு கினரே. 2

பள்ள மும்பசுஞ் சோலையும் வெண்மணற் பரப்பு
முள்ள தோரிட மவ்வையி னுறைந்தன ருரவோர்
வள்ள றன்னிடத் தொருவன்வந் திவ்வரை வனத்திற்
கள்ள ருண்டெனு மசுகையுங் கண்டன னென்றான். 3

இருந்த வவ்வையிற் கள்ளருண் டெனுமொழி யிசைப்பத்
தெரிந்து கண்டன மென்றனர் சிலர்சிலர் திகைத்தார்
விரிந்த செங்கதி ரோனுமேற் றிசையினிற் புகுந்தான்
வருந்த லென்றவர்க் குரைத்தனர் புகழ்முகம் மதுவே. 4

சோர ருண்டென மனந்துணுக் குறல்சுடர் வரையி
னேர தாயொரு நதியுள நிலஞ்சுழித் தெழுந்து
கோர மாய்வருங் கள்ளருங் குறுகிடா ரெனவே
காரெ முங்குடை முகம்மது கனவுகண் டனரே. 5

கனவின் செய்தியை யவரவர்க் குரைத்திடுங் காலைத்
தினக ரன்குணக் கெழுந்தன னதிசுழி கிளறி
வனம டங்கலும் வகிர்ந்தெடுத் திருகரை வழிந்திட்
டினம ணிக்கருங் கடல்வயி றிடைமடுத் ததுவே. 6

இருந்த பேரனை வருமெழுந் திருநதிக் கரையிற்
பொருந்தி நன்னெறி யீதென நடக்குமப் போதில்
வருந்திக் கள்வரு மறுகரை யிடத்தினின் மறுகித்
திருந்த நோக்கினுங் காண்கிலா தெழுந்தன திரைகள். 7

ஆறு வந்தது புதுமைகொ லெனவதி சயித்து
மாறு கொண்டவர் திரண்டொரு பெருவரை முகட்டி
லேறி நின்றுதே சிகர்தமை நோக்கலு மெழுந்து
மீறி வெண்டிரை புரட்டிமீக் கொண்டது வெள்ளம் 8

கள்ளர் வந்தவ ணிருந்தன ரெனக்கெடி கலங்கி
யுள்ள நொந்தனம் முகம்மதிங் குறுபொருட் டதனால்
வெள்ளம் வந்தது மறித்தது காணென வியந்து
வள்ள லைப்புகழ்ந் தார்வழி நடந்தனர் வசிகர். 9

தஞ்ச மீங்கிவ ரெனப்புகழந் தவர்தமை நோக்கி
யஞ்ச லாதுநின் றபூசகல் மனத்தினி லழன்று

விஞ்சை யான்முகம் மதுபடித் திவணிடை விளைத்த
வஞ்ச னைத்தொழில் லதுவே றிலையென மறுத்தான். 10

படிறு ளக்கசட் டபூசகல் பகர்ந்திடு மொழிகேட்
டடல பூபக்கர் மனத்தடக் கினுமடங் காதாற்
கொடிய தீவினைக் குரியவர் சொல்லினைக் குறித்தோர்
கெடுவ ரென்பதற் கையமி லெனக்கிளத் தினரே. 11

கரிந்த புன்மனச் சிறியவர் கழறிய கொடுஞ்சொற்
றெரிந்த மேலவர் செவிக்கிடா ரென்னுமத் திறம்போல்
விரிந்த கார்க்குடை நிழலிடை வரைப்புயம் விளங்க
வருத்த வப்பொருண் முகம்மது நடந்தன ரன்றே. 12

சிந்து நன்மணிக் கதிரெழத் திரைக்கரத் தெறிந்து
வந்த மாநதிக் கணியெனு மொருகரை மருங்கிற்
கந்த மென்மலர் செறிதருங் காவகங் கடந்து
புந்தி கூர்தர மக்கிக ளனைவரும் போனார். 13

சீத வொண்புனற் செழுமல ரோடையிற் செறிந்த
கோதில் வெண்சிறைப் பெடையொடுங் குருகின மிரியப்
பாதை போந்தனர் சாமெனுந் திருப்பெயர்ப் பதிக்கோர்
காத மாமென விறங்கினர் கடிமலர்க் காவில். 14

ஒட்ட கத்திர ளனைத்தையு மொழுங்குற நிரைத்துக்
கட்டி வாம்பரித் திரளையுஞ் சேர்த்தனர் கடிதின்
விட்ட பாசறை யிடங்களி னிவைவியப் பெனவே
செட்டர் சூழ்தர விருந்தனர் செழுமலர்க் காவில். 15

சோலை வாயொரு வானக மெனச்சுடர் திகழக்
கோல வார்கழற் குறைசிகள் குழுக்கண நாப்பண்
வேலை வெண்டிரை முகட்டெழு மதியினும் வியப்ப
மாலை தாழ்புய முகம்மது வந்துவீற் றிருந்தார். 16

------------------------

## ஈ. தேம்பாவணி - வீரமாமுனிவர்

### வளன் சனித்த படலம்

**தாவீது மன்னன் மரபில் காப்பியத் தலைவனாகிய வளன் எனப்படும் சூசை பிறந்த செய்தியைக் கூறும் பகுதி.**

### தாவீது மன்னன்

1.அன்ன மா திரு நகர் அகத்து, உடற்கு உயிர்
என்ன, மா தாவிதன் இனிதில் வீற்றிருந்து,
ஒன்னலார் வெரு உற உவந்து பாவலர்
சொன்ன பா நிகரும் மேல் துளங்கினான் அரோ.

2. அருளொடு வீங்கிய அகத்தினான் துளி
மருளொடு வீங்கிய மழைக் கையான் மலர்ச்
சுருளொடு வீங்கிய தொடையல் மார்பினான்
பொருளொடு வீங்கிய பொறைப் புயத்தினான்.

3. ஒளி தவழ் அசனியை உமிழ்ந்த வில்லினான்
அளி தவழ் நிழல் செயும் அருட் குடையினான்

வெளி தவழ் நவ மணி விழுங்கும் தேரினான்
களி தவழ் மதம் பொழி களிற்றின் ஆண்மையான்

4. மொய் முனர் பின்று இலா முரண் கொடு ஏறு எனா,
மெய் முனர் பொய் எனா வெருவு ஒன்னார் இவன்
கை முனர் நிற்கு இலா கலங்கிப் போற்றும், போர்
செய் முனர் செயம் செயும் சிங்க வாகையான்.

5. வேல் செயும் போரினால் வெலப்படான் தனைச்
சால் செயும் தவத்தினால் வென்ற தன்மையான்
சேல் செயும் புணரி சூழ் செகத்தில் நின்று, ஒளி
மேல் செயும் வானவர் விழைந்த பான்மையான்.

6. நீதி நல் முறை எலாம் நிறைந்த நீண் தவம்,
ஆதி தன் மறை இவை அனைத்தும் மேல் படர்
கோது இல் நன் உதவி செய் கொழு கொம்பு ஆகி, வான்
ஏது இல் நல் முறை இவண் இசைந்த மாட்சியான்.

7. கோல் நலம் கோடு இலா நிறுவிக் கூர்த்தலால்,
நூல் நலம் பொருள் நலம் அறத்தின் நுண் நலம்
தேன் நலம் இனிதினில் திளைந்து, நாடு எலாம்
மீன் நலம் பயின்ற வான் வியப்ப வாழ்ந்ததே.

8. பகை செய்வார்க்கு இடி என, படிந்து போற்றிய
தகை செய்வார்க்கு அமுது என நாமத் தன்மையான்,
நகை செய்வார்க்கு, இளவலாய், நடத்தும் வேல் இலான்,
மிகை செய்வான் ஆண்மையை விளம்பல நன்று அரோ

**கோலியாற்றின் அறைகூவல்**

9. மறை வழங்கிய வளம் கொள் நாட்டு இடை சவூல் ஆண்ட
முறை வழங்கிய கால், மறை பகைத்தனர், முகில் நின்று
உறை வழங்கிய ஒப்பு எனச் சர மழை வழங்கி,
பொறை வழங்கிய பிலித்தையர், போர் செய எதிர்த்தார்.
10. வேலியால் கது விடாத் திரு நகர் எலாம் நடுங்க,
மாலியால் கதிர் வகுத்த வாள் ஏந்தினர் நாப்பண்,
ஆலியால் கரிந்து அகல் முகில் உருக்கொடு வேய்ந்த
கோலியாற்று எனும் கொடியது ஓர் இராக்கதன் எதிர்த்தான்.

11. துளி சிறைச் செயும் முகில் புகும் இரு மலை சுமந்த
ஒளி சிறைச் செயும் ஒரு கரும் பருவதம் என்னா
வெளி சிறைச் செயும் வியன் இரு புயத்து மேல் சிரமே,
களி சிறைச் செயும் கதம் கொடு வெரு உறத் தோன்றும்.

12. நீண்ட வாள் புடை நெருங்கியே, படர் கரு முகில் போல்,
மாண்ட தோள் வியன் வட்டமே பொறுத்து, வெஞ் சுடரைத்
தூண்டல் ஆம் எனச் சுளித்த நீள் ஈட்டி கை தாங்கி,
கீண்டு அளாவு அழல் விழிவழி கிளர்ப்ப விட்டு எதிர்ந்தான்.

13. பெருக்கு வீங்கிய பெரும் புனல் அலை சுருட்டு அன்ன,
எருக்கு வீங்கிய இழிவு உகு நெஞ்சு இடை அடங்காச்

செருக்கு வீங்கிய இராக்கதன் எரி எழச் சினந்து,
தருக்கு வீங்கிய சல உரை இடி என இடிப்பான்.

14. “கூர்த்த போர் செயக் கூடினர்க்கு ஒருவன் வந்து எய்தி,
சீர்த்த நான் அவன் சிறந்த போர் தனித் தனித் தாக்க,
தோர்த்த பாங்கினர் தொழும்பர் என்று ஆகுவர்,““ என்னா,
ஆர்த்த ஓகையான் நகைத்து, இகழ்வு அறைந்து அறைந்து அழைப்பான்.

15. பெரிய குன்றமோ? பேய் அதோ? பூதமோ? ஏதோ?
உரியது ஒன்று இலா உருவினைக் கண்டு உளி வெருவி,
கரிய விண் இடி கதத்த மின் கொடு விடுத்து அன்ன
அரிய கோலியாற்று அறைந்த சொல் கேட்டனர் மருண்டார்.

16. நல் நெடும் படை நடுக்கு உறீஇ வெருவிய தன்மை
நல் நெடுங் குவடு ஒத்தனன் செருக்கு எழுக் கடுத்து,
பல் நெடும் பகல் பரமனைப் பகைப்பவும், இகழ்ந்த
சொல் நெடும் பகை தொடர்ந்தனன் எவரையும் நகைப்பான்.

17. தாங்குவார் இலா, சாற்றிய உரைகள் கேட்டு எவரும்
நீங்குவார் என, நிருபனும் அயரு தன் நெஞ்சிற்கு
ஏங்குவான்: ““எவன் எதிர்ந்த அவ் அரக்கனை வென்றால்,
ஆங்கு நான் அவற்கு என் மகள் அளிக்குவேன்““ என்பான்.

### தாவிதன் வீரவுரை

18. இன்னவாய்ப் பகல் நாற்பதும் இரிந்த பின், அண்ணர்
முன்னர் மூவரே முரண்செயப்போயினர், அவரைத்
துன்ன ஆசையால் தொடர்ந்து இள தாவிதன் எய்தி,
அன்ன யாவையும் அஞ்சினர் அறைதலும் கேட்டான்.

19. கேட்ட வாசகம் கிளர் திற நெஞ்சு இடத்து எரியை
ஈட்டல் ஆம் என எழுந்து, ““உளம் நினைந்தவை ஆக்கிக்
காட்ட, வாய்மையின் கடந்த, வல் கடவுளை நகைப்ப
வேட்ட லால், விளி விழுங்கிய கயவன் ஆர்?““ என்றான்.
20. “கை வயத்தினால், கருத்து இடத்து உடலின் ஊங்கு ஓங்கும்
பொய் வயத்தினான் புகைந்த சொற்கு அஞ்சுவது என்னோ?
மெய் வயத்தினால் விழை செயம் ஆவதோ? கடவுள்
செய் வயத்தினால், சிறுவன் நான் வெல்லுவேன்““ என்றான்.

21. என்றது அண்ணல் கேட்டு, ““இவன்தனைக் கொணர்மின் என்று இசைப்ப,
சென்ற அன்ன நல் சேடனை நோக்கலும், ““நீயோ
போன்ற உன்னினாய்? பொருப்பினைப் பெயர்த்து எறிந்து, உவமை
வென்ற திண்மையான் வெகுளி முன் நீ எவன்!““ என்றான்.

22. ஏந்தல் ஈர் அடி இறைஞ்சிய இளவலும் அறைவான் :
காய்ந்தது ஓர் பகை கடுத்த தன் பவம் செயின், மீட்டு
வேய்ந்தது ஓர் படை வேண்டுமோ? கடவுளைப் பகைத்து,
வாய்ந்த ஆண்மையை மறுத்தனை எவன் வெல்லான், ஐயா?”

23.“திறம் கடுத்த கொல் சிங்கமும் உளியமும் பாய்ந்து,
மறம் கருத்து அதிர் வல்லியத்து இனங்களும் எதிர்ந்து,

கறங்கு அடுத்த கால், கழுத்தினை முருக்கி நான் கொன்றேன்.
அறம் கெடுத்தவன் அவற்றினும் வலியனோ?"" என்றான்.

24. அரிய ஆண்மையை அதிசயித்து அரசன், ""நன்று"" என்னா,
விரி அளாவு ஒளி வேலொடு தனதுபல் கருவி
உரிய போர் செய ஒருங்கு தந்தனன். ""அவற்றொடு"" தான்,
""திரிய வாய் முறை தெரிகிலேன்"" என மறுத்து அகன்றான்.

25. தெரிந்த வாய்ந்த ஐஞ் சிலையொடு கவண் எடுத்து, எவரும்
இரிந்த பாலனை நோக்கி உள் அதிசயித்து இரங்க,
விரிந்த ஆசையால் வேதியர் ஆசியைக் கூற,
பிரிந்த கால் ஒலி பெருக ஆங்கு அனைவரும் ஆர்த்தார்.

**கோலியாற்று வீழ்ச்சி**

26. ஆர்த்த ஓதை கேட்டு, அரக்கன், இன்று அமர்க்கு எதிர் வருகப்
பார்த்த பாலனைப் பழித்து எழுந்து, யாவரும் அஞ்சக்
கூர்த்த வேலொடு குறுக வந்து, அகல் கரு முகிலின்
பேர்த்த கோடை நாள் பேர் இடி என உரை செய்தான்:

27. நீ, அடா, எதிர் நிற்பதோ? மதம் பொழி கரி மேல்
நாய், அடா, வினை நடத்துமோ? கதம் கொடு நானே
வாய், அடா, பிளந்து உயிர்ப்பு இட மறுகி நீ நுண் தூள்
ஆய், அடா, உலகு அப்புறத்து ஏகுவாய்!" என்றான்.

28. வெல் வை வேல் செயும் மிடல் அது உன் மிடல், அட! நானோ
எல்வை ஆதரவு இயற்று எதிர் இலாத் திறக் கடவுள்
வல் கையோடு உனை மாய்த்து, உடல் புட்கு இரை ஆக
ஒல் செய்வேன்" எனா, உடை கவண் சுழற்றினன் இளையோன்.

29. கல்லை ஏற்றலும், கவணினைச் சுழற்றலும், அக்கல்
ஒல்லை ஓட்டலும் ஒருவரும் காண்கிலர் இடிக்கும்
செல்லை ஒத்து அன சிலை நுதல் பாய்தலும், அன்னான்
எல்லை பாய்ந்து இருள் இரிந்து என வீழ்தலும்கண்டார்
30. கடை யுகத்தினில் கரு முகில் உருமொடு விழும் போல்,
படை முகத்தினில் பார்பதைத்து அஞ்ச வீழ்ந்தனன் தன்
புடை அகத்தினில் புணர்ந்த வாள் உருவி, "என் தெய்வம்
உடை உரத்தினை உணர்மின்!" என்று இருஞ்சிரம் கொய்தான்

31. கூன் நெடும் பிறை குழைந்த வாய் நிரைநிரை தோன்ற,
ஊன் நெடுந்திரை ஒழுக, ஆங்கு அனைவரும் கூச,
நீல் நெடும் பொறை நிகர் தலை தூக்கினான், ஒன்னார்
மால் நெடும் படை மருண்டு உளைந்து உளம் முறிந்து ஓட.

32. கார் முகத்து அசனி கூசக் கடுத்த அவ் அரக்கன் வென்ற
சீர் முகத்து இளவல், பின்னர் திறத்த தன் நாம வேலால்
போர் முகத்து எதிர் ஒன்று இல்லான், பொழி மறை பழித்த யாரும்
பார் முகத்து அதற்கு எஞ்ஞான்றும் பரிந்திட வகை செய்தானே

33. கொய்த வாள் முடி திரண்ட குப்பைகள் ஏறி, வெய்யில்
செய்த வாள் முடியைச் சூடி, சிறந்த ஆசனத்தில் ஓங்கி,

பெய்தவான் ஒளியோடு ஆய்ந்த பெருந் தயை பிலிற்றும் செங்கோல்
எய்த வான் இறையோன் ஆண்மை எய்தியே, அரசன் ஆனான்.

34. நூல் நகத் துளங்கி, கேள்வி நுண் அறிவாளர் ஒவ்வா,
வானகத்து ஒதுங்கி வாழும் வரும் பொருள் காட்டும் காட்சி,
கானகத்து ஒதுங்கி வைகும் கடித் தவத்தோடும் இன்ன
கோன் அகத்து இலங்கி, அங்கண் குடி என வதிந்த தாம் ஆல்.

35. சூழ்ந்த பொன் முடியும் கோலும் துறந்து போய் அரிய கானில்
வாழ்ந்த ஒண் தவம் செய் மன்னர் வழங்கினும், அதனைக் கூட்டி
ஆழ்ந்த பல் மணியின் வீங்கும் ஆசனத்து இருக்கச் சேர்த்தல்
தாழ்ந்த பண்பு ஒழித்த இன்ன தரும கோன் அரிதின் செய்தான்.

36. வேலொடு மாற்றார் வெள்ளம் வென்று வென்று அடக்கி, தன்னை
நூலொடு வெல்ல ஐந்து துன்புலன் அடக்கிக் காத்து,
கோலொடு வழாமை நீதிக் கொழுந்து சேர் கொழுகொம்பு ஆனான்,
சூலொடு வழங்கும் மாரித் துளி பழித்து அருளும் கையான்.

37. மன் அருந் தயையால் பாரில் வழங்கிய சீர்த்தி அல்லால்,
இன் அருங் குணங்கள் தம்மால் இறையவற்கு உகந்த கோமான்,
முன் அருந் தவத்தோர் கொண்ட முறைதவிர் வரங்கள் எய்தி,
துன் அரும் உயர் வீடு உள்ளோர் துணை எனப் புவியில் வாழ்ந்தான்.

38. ஆயினான் நடந்த தன்மை ஆண்டகை உவப்பில் ஓர் நாள்
"வீயினால் நிகர்ந்த எச்சம் இடை முறை பலவும் போய் ஓர்
சேயினால் நயப்பச் செய்வேன், சிறந்த மூஉலகில் அன்னான்
வாயினால் நவிலாக் கோன்மை வரம் பெற அளிப்பேன்" என்றான்.

**வாக்குறுதியின் வழித் தோன்றல்**

39. தந்த இவ் வரம் இன்னான் தன் சந்ததி முறையில் சேய் ஆய்
வந்த தற்பரனால் ஆய வளப்பம் என்றாலும், என்ற
இந்த நல் முறையால், மைந்தன் இயல்பொடு தேவன் என்பான்
அந்தரம் முதல் யாண்டும் ஆள்வதும் அரிய பாலோ?

40. கோன்மையால் உயர்ந்த தாவின் கோத்திரத்து உதிக்கும் தெய்வ
மேன்மையால் ஒருவன் அன்றி, விபுலையில் பிறக்கும் மாக்கட்
பான்மையில் உயிர்த்த மைந்தன் பாரொடு வானும் ஆள,
நான்மையால் வழுவாச் செங்கோல் நல்க உள்ளினன் ஆம் நாதன்.

41. உள்ளினது எல்லாம் உள்ளும் உறுதியால் ஆக்கும் வல்லோன்,
எள்ளினது எல்லாம் நீக்கும் இயல்போடு, தாவிதன் தன்
வள் இன முறையில் சேய் ஆய் வந்து மூ உலகம் ஆள
நள்ளின வளம் கொள் ஆசை நயத்தொடு தெரிந்திட்டானே.

42. ஏற்றிய முறையோடு, எந்தை, இயன்ற தன் வலிமைகாட்ட
போற்றிய வரம் கொடு எங்கும் பொருநனாய்த் தெரிந்த சூசை,
சாற்றிய கோத்திரத்தின் தலைமுறை வழுவாதேனும்,
மாற்றிய திரு ஒன்று இன்றி வறுமையான் பிறக்கச் செய்தான்

43. பொய்ப் படும் உலக வாழ்வின் பொருட்டு இலாமிடிமையோடு,
கைப் படும் உழைப்பில் உண்டி காண வந்து உதித்த இல்லான்,
மெய்ப்படும் அறத்தின் ஆண்மை விளங்கிய முறையின், பின்னர்
ஐப் படும் விசும்பொடு எங்கும் அரசனாய் வணங்கச் செய்தான்.

44. நூல் நிலம் காட்சியால் நுனித்த கால் உணர்
மீன் நிலம் கடந்து எலாம் ஆளும் வேந்து தான்
தேனில் அம் கருணையால் தெளிந்த எல்வையில்,
கான் நிலம் தவத்தினால் கருப்பம் ஆயதே.

45. கொலை முகந்து அழன்ற வேல் கொற்றத் தாவிதன்
தலை முகந்து ஒழுகிய குலம் சகோபு அவன்
சிலை முகந்து அவிர் நுதல் தேவி நீப்பி இன்பு
அலை முகந்து உவந்து சூல் அணிந்து உள் ஓங்கினாள்.

46. மணி பழித்து அருங் கவின் மங்கை உள் உவந்து,
அணி பழித்து அணிந்த நல் கருப்பம் ஆய கால்,
பிணி பழித்து உறு நயம் பெருகி மேல் எழீஇ,
பணி பழித்து ஒளி முகம் பொறித்த பான்மையே.

47. தாரொடு சனித்த தேன் தன்மையோ? வளை
ஏரொடு கொண்ட முத்து இலங்கும் தன்மையோ,
நீரொடும் ஐந்து தம் பகையை நீத்து, ஒரு
சீரொடு, வேற்று இல சிறந்த சூல் அதே?

48. அறை வளர் மனையினுள் அரசன் புக்கு என,
இறை வளர் அன்பின் ஓர் உயிர் இயற்றி, வெண்
பிறை வளர் நலமென வளர்ந்த பீள் உள
சிறை வளர் உடலினுள் செலுத்தினான் அரோ.

49. வாய் வழி பரவிய நஞ்சின் வண்ணமே,
காய் வழி ஆதன் முன் கனிந்து அருந்திய
தீய் வழி, கரு வழி சேரும் தொல் செயிர்
ஓய் வழி பொறாது, இறை ஒழிய முன்னினான்.

50. புரப்ப ஓர் பொது முறை பொறாத தன்மையால்,
கருப்பம் ஓர் எழு மதி கடக்கும் முன் வினை
பரிப்ப ஓர் சிறப்பு அருட் பயத்தின் சூல் செயிர்
விருப்பமோடு இறையவன் விலக்கினான் அரோ.

51. தீயவை விலக்கிய சிறப்பின், தேவு அருள்
தூயவை பதி வரத் தொகையின் சூல் இடத்து
ஆயவை அறிந்திலள், அளவுஇல் உள் மகிழ்
தாய் அவள் வியப்பு உறீஇ, தளர்வு அற்று ஓங்கினாள்.

52. தேன் முகம் புதைத்த சூல் செறித்த சீர் கொடு
கான் முகம் புதைத்து அவிழ் கமலப் பூ என,
சூல் முகம் புதைத்த சீர்த் தொகை புறப்பட,
தான் முகம் புதைத்து ஒளி தயங்கும் தாய் அரோ.

53. சொல் ஆர் நிகர் கெட ஓர் வனப்பின் பைம் பொன் சூல் முற்றி,
அல் ஆர் இருள் கெட மீ முளைத்த திங்கள் அணி மணி போல்
எல் ஆர் முகத்து இலங்கிப் பிறந்த தோன்றல் எழில் கண்டு,
பல்லார் உடை மம்மர் கெட, தாய் இன்பப் பயன் கொண்டாள்.

54. கண்டார் எவரும் உளத்து உவப்ப மேல் ஓர் கனி இன்பம்
கொண்டார் அருள் பொறித்த முகத்தின் மாமை கொழித்த கதிர்
உண்டார் தெளிவு உண்டார்: "கடவுள் தன் தாட்கு உவகை செயும்
தண் தார் இவன் ஆவான்", என்ன வாழ்த்திச் சயம் சொன்னார்.

55. மாசை மிக்க நிற மணியின் சாயல் மகன் நோக்கி,
ஆசை மிக்க கனி ஈன்றாள், "கற்றோர் அருந் தொடைப்பா
ஓசை மிக்க அறத் தொகையின் பீடத்து உயர் வளர்க,
சூசை!" என்று அவனை ஏந்தி, எந்தை தொழுகின்றாள்.

56. எல்லின் கதிர் திரட்டி, திலகம் திங்கட்கு இட்டது போல்,
வில்லின் முகத்து இன் தாய் மகனை ஏந்தி, விழைவு உற்ற
சொல்லின் முகத்து இறையோன் தாளைத் தாழ்ந்து, "இத்தோன்றல் அறத்து
அல்லின் வேந்தன் என வளர்தற்கு ஆசி அருள்க," என்றாள்.

57. வீடா வான் நலம் செய் நோக்கு நோக்கி விண் இறையோன்
கோடா வரத்து ஆசி செய் வான் மேல் ஓர் குரல் தோன்றி,
"ஆடா நிலை அறத்து என் மார்பில் தேம்பா அணி ஆவான்
வாடா அருள் மகன்," என்று அம் பூ மாரி வழங்கிற்றே.

58. மை நூற்று எனக் கரும் பூங் குழலாள் வாய்ந்த மகன் நலம் கேட்டு,
எந் நூல் திறத்தினும் மேல் அடியின் வீழ்ச்சி இனிது இயற்றி,
மெய் நூல் திறத்த மறை முறையின் விள்ளா வினை எல்லாம்
கை நூல் திறத்து அறவோர் இயற்றி ஆசி கனிந்து உரைத்தார்.

59. கூம்பா அணி மகற்குக் கணிதம் மிக்கோர் கூறு புகழ்
ஓம்பா அணி ஆக அனைத்தும் நீக்கி, "ஒருங்கு உடன் ஓர்
சாம்பா அணி ஆக இரங்கி எந்தை தான் புகழ்ந்த
தேம்பாவணியே!" என்று, அணி மிக்கு அம் பூண் சேர்த்தினரே.

60. செய் வாய் வான் உடு சூழ் குழவித் திங்கட் சீர் பொருவ,
பெய் வாய்க் கிண்கிணியும் சிலம்பும் ஆர்ப்பப் பெய்து, சுடர்
வை வாய் மணி ஆழி இட்டு, பைம் பூ மலர் கிடத்தி,
"மொய் வாய்க் கடல் உலகின் திலதம்", என்பார் முகம் கண்டார்.

61.வான் மேல் வைத்த சுடர் கிடக்கும் வண்ண வடிவு", என்பார்.
கான் மேல் வைத்த தவம் இனி நன்று இங்கண் காட்டும்", என்பார்.
நூல் மேல் வைத்த மறை விளக்கும் நுண் மாண் சுடர்", என்பார்.
நால் மேல் வைத்த புகழ் விள்ளார் கொண்ட நயம் விள்ளார்.

---------------------------------